# கனடா-காரை கலாசார மன்றம்

## தமிழ் மொழித் திறன் போட்டி – 2023

### வாசிப்பு – மத்திய பிரிவு – 3ஆம் 4ஆம் வகுப்பு

## நன்றியுள்ள நாய்

ஆதவன் ஒரு நாயை வளர்த்து வந்தான். அது அவனுடைய வீட்டைக் காவல் செய்து வந்தது. அது ஆதவனிடம் அதிக அன்பு வைத்திருந்தது.

ஒரு நாள் ஆதவன் களைப்பு மிகுதியினால் கட்டிலில் படுத்துத் தூங்கினான். அப்போது அங்கே ஒரு திருடன் வந்தான். அவன் உள்ளே நுழைவதை நாய் கண்டது. உடனே நாய் குரைத்தது. இச்சத்தம் கேட்டு நித்திரையில் இருந்த ஆதவன் திடுக்கிட்டு எழுந்தான். நாய் ஏன் குரைத்தது என்று வீட்டைச் சுற்றிப் பார்த்தான். ஒருவரையும் காணாததினால் நித்திரையைக் குழப்பிய நாய்க்கு அடித்துவிட்டான். நாய் அழுதுகொண்டு படுத்துத் தூங்கியது. நாய் நன்றியுள்ள மிருகம் என்பதற்கு இக்கதை சிறந்த உதாரணமாகும்.